இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2016–17

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 20.02.2017

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைப்பயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளிக் குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள் உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. தென்னை மட்டை உள்ளிட்ட பசுந்தீவனங்கள் வழங்கப்பட்டது. முகாமில் கலந்து கொள்ளாத யானைகளான திருப்புகலூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் யானை சூலிகாம்பாள், கும்பகோணம் அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில் யானை மங்களம், திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில் யானை கோமதி, சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில் யானை ராஜேஸ்வரி ஆகிய யானைகளுக்கு மருந்து வழங்கப்பட்டது. பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் வேதநாயகி யானைக்குப் பாதத்தில் உள்ள காயத்திற்கு சிகிச்சை அளித்து ஷீ அணிவிக்கப்பட்டது. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின.

